This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# பதவிக்காக

ராமராஜபுரம் தொகுதி. நவம்பர் 25, 19... இரவு பன்னிரண்டு மணி. கலெக்டர் ஆபீஸ் வாசலில் ஆயிரக்கணக்கான மின்சார வாட்டுகளை விரயம் பண்ணிக்கொண்டிருந்த ஆர்க் விளக்குகளுக்கு ஆசைப்பட்டு ஆயிரக்கணக்கான விட்டில் பூச்சிகள் சுற்றிக் கொண்டிருந்தன. அந்த வெளிச்சத்தில் கேட்டுக்கு வெளியே பூச்சிகளைவிட அதிக மக்கள் கதவை அலைமோதிக் கொண்டிருந்தார்கள். ஒலிப்பெருக்கி, கம்பத்துக்குக் கம்பம் கொம்பு மாட்டப்பட்டு உள்ளே ஓட்டுக் கணகெடுப்பவரின் ‘சள சள’வை அனாவசியத்துக்கு பெரிதாக்கிக் கொண்டிருந்தது. “ஹலோ செக்” என்று ஒருத்தர் மைக் முன்னால் விரல் சுண்டுவது காந்தி பஜார் கடைத்தெருவின் இறுதியில் இருந்த அண்ணா சிலை வரைக்கும் கேட்டது. கடைகள் அனைத்தும் மூடியிருக்க காப்பர் பாய்லரின் அருகே டீ ஆற்றிக்கொண்டிருந்தார்கள். இந்தப் பக்கம் பெஞ்சுகள் போட்டு இரவு பிறந்திருந்த தற்காலக் கடைகள். பின்னிரவு லாரிகளுக்காகக் காத்திருக்கும் வேளையில் பாயா ரொட்டியை அரசியலுடன் பந்தாடிக் கொண்டிருந்தார்கள்.

“ராத்திரி ரெண்டாயிடும் போலாயிருக்கே அண்ணே?”

“ஆமாடா, ஆயிரும். நிச்சயம் மறு எண்ணிக்கை எடுப்பாங்க. ரொம்ப குளோஸ்!”

“ஒரத்தம்பட்டியிலே அப்படியே ப்ளாக் ஓட்டு ஆயிருக்கு பாத்தியா?”

“தாளி தண்ணியே காட்டாம தேர்தலுக்கு முதநா பூனை மூத்திரம் மாதிரி தண்ணிவிட்டா சுயஜாதிக்காரங்களா இருந்தாலும் வெறுப்பில வெளி ஜாதிக்கு போட்டாங்களே, அவங்கதாண்டா சீமானுங்க. இப்பப் பாரு. நக்குது!”

“என்னவோ எட்டாயிரம் ஓட்டு பத்தாயிரம் ஓட்டுன்னாங்க?”

“ஒரு பூவும் இல்லை!”

“படுத்துக்கிட்டே செயிப்பேன்னாரு?”

“நின்னுக்கிட்டே தோக்கப் போறாரு.”

“சொல்ல முடியாது. திருக்காளர், ஜவஹர் நகர் எல்லாம் இன்னும் பொட்டி உடைக்கலை.”

“ஜவஹர் நகர்ல எல்லாம் பணக்காரங்க. சின்னப்பன் வூடே அங்கதானே.”

“வப்பாட்டி வீடா, சொந்த வீடா?”

“ரெண்டுமே பக்கத்துப் பக்கத்திலே, ஒரே தெருவுல!”

“மச்சம்யா அவனுக்கெல்லாம்!”